சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 02.04.2025**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண்கள் SA 21245/E/2023, SA 21421/E/2023 & SA 21422/E/2023**

திரு.S.மஞ்சுநாத் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ நிர்வாக அலுவலர், இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம், கிருஷ்ணகிரி. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 08.01.2025 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.யுவராஜ், நிர்வாக அலுவலர், இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அலுவலகம், கிருஷ்ணகிரி அவர்கள் 27.03.2025 அன்று இவ்வாணையத்தின் முன் ஆஜராகி, தங்கள் அலுவலக ந.க.எண்.787/நி4/2025, நாள் 07.03.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் கோரிய தகவல் வழங்க வழிவகை இல்லை என்ற விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தனது அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 08.01.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவில் மனுதாரரால் அளிக்கப்பட்ட புகார் மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா, இல்லையா என்பது குறித்தும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை மனுதாரருக்கு தகவலாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்ட நிலையில், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் புகார் மனு மீதான தகவல்களை வழங்க வழிவகை இல்லை என 07.032025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதை தகவலாக கருத வழிவகை இல்லை.

3. ஆணையத்தால் மேற்படி தகவல்களை மனுதாரருக்கு வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்ட பின்னரும், ஆணையத்தின் உத்தரவினை உரிய முறையில் நிறைவேற்றாமல் மேற்கண்டவாறு தகவல் வழங்கிய பொதுத் தகவல் அலுவலரை இவ்வாணையம் கடுமையாக எச்சரிக்கிறது.

4. மேலும், மேற்படி வழக்குகளில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார் மனு மீது, இணை இயக்குநர் கிருஷ்ணகிரி அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இறுதி அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும், மேற்படி அறிக்கையினை ஆணையத்தின் பார்வைக்கு பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்தார்.

5. இவ்வழக்குகளில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர் அவர் அளித்த புகார் மனு குறித்த தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். மேற்படி தகவல்கள் வழங்கவேண்டிய தகவல்கள் என்பதால், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் புகார் மனு பெறப்பட்ட நாள் முதல், நாளதுவைரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த முழு கோப்பின் நகல்களை, **சட்டப்பிரிவு 2(j)-ன்படி** பார்வையிட்டு குறிப்பெடுத்துக்கொள்ள தெரிவித்து மனுதாரருக்கு கடிதம் அனுப்ப பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

6. அதன்படி மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ், தகவல் தொடர்புடைய ஆவணங்களை பார்வையிட்டு, அவருக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் ஆவணங்களின் நகலை அவர் குறிப்பிட்டுக் கோரும் தகவல்களை, கட்டணம் ஏதுமின்றி, <u>அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,</u> ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 29.05.2025 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

6. மேற்படி உத்தரவிற்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்க தவறும் பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1), 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்படுகிறது.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண்கள் SA 21245/E/2023, SA 21421/E/2023 &**</u>
<u>**SA 21422/E/2023பெறுநர்**</u>

பொதுத் தகவல் அலுவலர்/ நிர்வாக அலுவலர்,
இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

<u>மேல்முறையீட்டாளர்</u>
திரு.S.மஞ்சுநாத், த/பெ.சீனப்பா,
க.எண்.47/3, அண்ணா நகர்,
சின்னகோட்டை மாரியம்மன் கோவில் எதிரில்,
ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 109.

Copy to: File MP/PA,